**10 மலையத்துவசனை அழைத்த படலம்**

சாஸ்திரத்தில் கணவனது கையையோ, மகனது கையையோ, பசுங்கன்றின் வாலைப் பற்றிக் கொண்டோ புண்ணிய தீர்த்தங்களில் நீராடுவது முறையென்று கூறப்பட்டுள்ளது.

இதனை அறிந்த காஞ்சனமாலை தானும் தன் கணவனுடன் நீராட ஆசைக் கொண்டு தன் மகளிடம் முறையிட்டாள். தேவியும், ஐயனிடம் தன் தாயின் ஆசையை நிறைவேற்றுமாறு வேண்டினாள் .

ஐயனும் இந்திரன் மூலம் மலையத்து வஜனை தெய்வவிமானத்தில் ஏழ்கடல் அடங்கிய கிணற்றின் அருகில் வந்திறங்குமாறு செய்தார். புதல்வியைக் கண்ட மலையத்துவஜன் புளகாங்கிதம் அடைந்தான். கணவனைக் கண்ட காஞ்சனமாலை எல்லையில்லா ஆனந்தமடைந்தாள். மலைத்துவஜனும் காஞ்சனமாலையும் அந்தணர் கூறிய அறநெறிப்படி, களிப்புடன் நீராடி, கரை ஏறி, பந்த பாசங்கள் அற்றவர்களாயினர். அம்மையப்பனின் வடிவுக்கண்டு மகிழ்ந்தனர். நீலகண்டமும், நெற்றிக்கண்ணும் கொண்ட சிவ சொரூபத்தை உலகத்தார் கண்டு வியந்தனர்.

மலையத்துவஜனும், காஞ்சனமலையும் ஐயனின் ஆணைப்படி இந்திரனின் தெய்வ விமானத்தில் ஏறி ஹர ஹர என்ற கோஷம் முழங்க சிவலோகம் அடைந்து பிறவா பெருவாழ்வுப் பெற்றனர். தடாதகைப் பிராட்டியார் தன் பெற்றோருக்கு நற்கதி காட்டியதற்காக நன்றி தெரிவித்து நம் வம்சவிருத்திக்கு அருள் வேண்டினாள்.

**பல்லவி**

கணவனோ மகனோயின்றி கன்றின் வாலைப் பிடித்தே
கடல் நீராட கலங்கினாள் காஞ்சனை

**அனுபல்லவி**

கணமே ஏழ்கடல் வாவிக்கரையில் மலையத்துவஜன்
காஞ்சனமாலையும் நீராட கடுகி வரச் செய்தாய்

**சரணம்**

கணவன் கைப்பற்றியே கடல் நீராடி உன்
காட்சியையும் அவள் காணச் செய்தாய்
கணவனுடன் அவள் கனக விமானந்தன்னில்
கயிலை யடைந்திட கருணை செய்தீரே